# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/11 - 2015 නොවැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2015.11.24

*1942/11 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 104/44*

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

"விஷ் பவுன்டேஷன் நம்பிக்கைப்பொறுப்பு", அதாவது -

1. ஜயந்த மிஹிரவ விக்ரமாராச்சி,
2. தானியா ரசங்கி விக்ரமாராச்சி,
3. எராந்தி லைசா விக்ரமாராச்சி,
4. தம்மிக கித்துல்கொட

ஆகியோர், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் அவர்களது கூட்டிணைப்புக்கென நீதியமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளனராதலால்,

ஆகவே, இப்பொழுது, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் கூட்டிணைப்புக்கு அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன், பின்வருமாறு பணித்து வெளிப்படுத்துகின்றேன்:-

(அ) மேலே பெயர்குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் விதிகளின் கீழும் அத்துடன் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். டபிள்யூ. எம். பீ. ராஜகருண என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் 4 ஆந் திகதிய 264 ஆம் இலக்கத்தைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டவர்களான அவர்களின் அடுத்துறுவோரும், ''விஷ் பவுன்டேஷன் நம்பிக்கைப்பொறுப்பு" என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில், ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெற்றுக்கொள்ளலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறுவகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்துமாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்குவிடலாம் அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கலாம் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப்பொறுப்பாளர், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பில் எழுகின்ற வழக்கெழு காரணிகளிலும், வழக்குகளிலும் இலங்கையில் அல்லது வேறெங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பதற்கும், வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடை இறுப்பதற்கும் விடை இறுக்கப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தைக் கொண்டு சட்டப்படி இயலுமானவர்களும் தகுதிவாய்ந்தவர்களுமாதல் வேண்டும்.

இக்கட்டளை இல்லாதொழிக்கப்படலாம், அல்லது அவசியமானதென எனக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

விஜயதாச ராஜபக்ஷ,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
*2015, நவெம்பர் 06.*

*12- 352*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.